**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 410/2022**

**PW - 4**

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயபிரகாஷ் ( LW. 8) |
| Father's / Husband Name | : | த/பெ. பாலன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste & Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.12.2023** என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :- மதியம் 03.25 மணி )**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்போது செங்கோணப்பாளையம் சிலுவம்பட்டி அஞ்சல் நாமக்கல் மாவட்டத்தில் குடியிருந்து போர் வண்டி டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். இதில் அ.சா.1 யையும், அவரது மகனையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தேதி ஞாபகமில்லை. நான் இந்த சம்பவம் நடைபெறும் போது இந்த ஊரில் இல்லை. எனக்கு சம்பவம் நடந்த அடுத்த நாள் தொலைபேசியில் எனது மனைவி அ.சா.1 அவரது மகன் சதீஸ்குமார் மற்றும் ஆஜர் எதிரிகளுக்கு பிரச்சனை நடந்தது சம்மந்தமாக எனது மனைவி சொன்னார். இரண்டு நாட்கள் கழித்து தான் நான் ஊருக்கு வந்தேன். சாமி ஊர்வலம் வரும் போது அவரது பழனிசாமி மகனும், அவரும் காரில் வந்ததாகவும், ஆஜர் எதிரிகள் சிறிது நேரம் தாமதமாக இருந்து விட்டு செல்லுமாறு சொன்னதற்கு இல்லை வழிவிடுங்கள் என்று பேச்சுவார்த்தை இரு தரப்பினர்களுக்கும் தகராறு ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். இது மட்டும் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் போலீசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) கடந்த 02.04.2022ம் தேதி நடந்த அ.சா.1ம் மற்றும் அவரது மகன் சதீஸ்குமார் இன்று ஆஜராகி இருக்கும் எதிரிகளுக்கு இடையே நடந்த சம்பவங்களை பற்றி நன்கு தெரிந்து கொண்டும், போலீசார் 06.04.2022ம் தேதி காலை 7.00 மணிக்கு பிரச்சனை சம்மந்தமாக சம்பவம் இடம் வந்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் இரண்டாவது சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் என்னுடைய நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதராவாக வழக்கு சம்பவங்களை மாற்றி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை — இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்:— மதியம் 03.40 மணி )**